## தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை

## அலுவலக உதவியாளர் பதவிக்கான
## விளம்பர அறிவிக்கை

சென்னை, தலைமைச் செயலகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை நியமன அதிகாரி, சென்னை தலைமைச் செயலக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு துணைச் செயலாளரால் நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 25.01.2021 முதல் 14.02.2021 வரை இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | – | அலுவலக உதவியாளர் |
| 2. | பணியின்தன்மை | – | சென்னை, தலைமைச் செயலகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் பணிபுரியும் உயர் அலுவலர்களுக்கு அடிப்படைப் பணிகளை மேற்கொள்வதில் உதவி செய்தல் மற்றும் அலுவலக நடைமுறை பணிகளில் உதவிடுதல். |
| 3. | சம்பளம் | – | ரூ.15700 – 50000/–(Level-1) என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன் |
| 4. | வயது | – | 01.01.2020 அன்று 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். |

| இனசுழற்சி முறை | அதிகபட்ச வயது வரம்பு (01.01.2020 அன்றுள்ளவாறு) |
|---|---|
| பொதுப் பிரிவு (GT) | 30 வயதுக்குள் |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் (BC, BC(M), MBC & DNC) | 32 வயதுக்குள் |
| ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவை (அனைத்து வகுப்பினர் [SC/ST/DW(all Category)] | 35 வயதுக்குள் |
| முன்னாள் இராணுவத்தினர்–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு (Ex-Servicemen- SC/ST/BC) | 53 வயதுக்குள் |

| | |
|---|---|
| முன்னாள் இராணுவத்தினர்–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லாதோர் (Ex-Servicemen-Other than SC/ST/BC) | 48 வயதுக்குள் |
| மாற்றுத்திறனாளிகள் | வயது உச்ச வரம்புடன் கூடுதலாக 10 ஆண்டுகள் |

| | | |
|---|---|---|
| 5. | **மொத்த பணியிடங்கள்** | **12 எண்ணிக்கை** |
| 6. | **இடஒதுக்கீடு விவரங்கள்** | |

| GT/OC | | BC(M) | | BC (other than Muslim) | | MBC/DNC | | SC | | SC(A) | ST | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **3** | | **1** | | **4** | | **2** | | **2** | | **–** | **–** | **12** | |
| P | NP | P | NP | P | NP | P | NP | P | NP | – | – | P | NP |
| 1 | 2 | 1 | 0 | 1 | 3 | 0 | 2 | 0 | 2 | – | – | 3 | 9 |

***P–Priority, NP-Non-Priority***

| | | | |
|---|---|---|---|
| 7. | **கல்வித்தகுதி** | – | **தமிழ்நாடு அடிப்படை பணி விதிகளுக்கான சிறப்பு விதி, விதி** 5(2)(a)ன்படி அங்கீகாரம் பெற்ற பள்ளியில் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>(VIII STD Pass from a recognised School as per Special Rule for Tamil Nadu Basic Service, Rule 5(2)(a) and ability to Read and Write in Tamil) |
| 8. | **விண்ணப்பங்கள்** | – | இப்பணிக்கான விண்ணப்பங்களை http://www.tnrd.gov.in/ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும். |
| 9. | **கடைசி நாள்** | – | 14.02.2021, 5.45 பி.ப வரை<br>**(காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது)** |

மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்தி வைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யவோ, சென்னை, தலைமைச் செயலகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு துணைச் செயலாளர்(அ.ந) அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. மேலும், தேவைப்படின் தேர்வர்களுக்கு எழுத்துத்தேர்வும் நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையை தவறாது படித்து பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இடம் : சென்னை
நாள் : 25.01.2021

அரசு துணைச் செயலாளர்(அ.ந),
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை,
தலைமைச் செயலகம், சென்னை.

## Instructions to Applicants

**இணையவழியே விண்ணப்பிப்பது எப்படி**

1. Candidates should apply only through online in the Tamil Nadu Rural Development and Panchayat Raj Department Website www.tnrd.gov.in

   விண்ணப்பதாரர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இணையதளம் www.tnrd.gov.in மூலம் இணையவழியே மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

2. For applying, the Candidates should have scanned image of their photograph and signature in CD/DVD/Pen drive as per their convenience.

   விண்ணப்பதாரர்கள் தங்களது புகைப்படம் மற்றும் கையொப்ப நகல் ஆகியவற்றை சிடி/டிவிடி/ பென் டிரைவ் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றை அவரவர் வசதிகேற்ப தயாராக வைத்திருக்கவும்.

3. Candidates who wishes to apply for the post of Office Assistant shall click **"Apply Online"** against the post Notified in the Tamil Nadu Rural Development and Panchayat Raj Department Website www.tnrd.gov.in.

   அலுவலக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இணையதளத்தில் www.tnrd.gov.in அறிவிக்கை செய்யப்பட்டுள்ள பதவிக்கு எதிரே "**Apply Online**" என்பதை சொடுக்கி விண்ணப்பிக்க வேண்டும்.

4. Candidates should provide their personal details and submit the application at once by click **'SUBMIT'** button. After submitting, download the duly filled application in PDF file.

   விண்ணப்பதாரர்கள் தங்களது விவரங்களை பதிவிட்டு "**SUBMIT**" என்பதை சொடுக்கி விண்ணப்பத்தினை சமர்ப்பித்திட வேண்டும் பின்பு, நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்ய வேண்டும்.

5. Please note that all the particulars mentioned in the online application including Name of the Candidates, Post Applied for Communal Category, Date of Birth, Address, Mobile Number, etc., will be considered as final. However, Candidates can modify the fields till the last date specified for applying online. Click the "TO EDIT & UPDATE" link in the www.tnrd.gov.in website and provide the Mobile Number, Communal category and Date of birth details to edit and updating the already filled application form.

   அலுவலக உதவியாளர் பதவிக்கான விண்ணப்பத்தில் விண்ணப்பதாரர்கள் தரும் பெயர் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், சாதிப்பிரிவு, பிறந்த தேதி, முகவரி, அலைபேசி எண்

போன்ற விவரங்கள் இறுதியானவை என கருதப்படும். இருப்பினும் சில விவரங்களை தேர்வுக்கு விண்ணப்பிக்க கொடுத்துள்ள இறுதிநாளுக்கு முன்னரும் கூட மாற்றம் செய்யலாம். விண்ணப்பதாரர்கள் www.tnrd.gov.in என்ற இணையதளத்தில் "TO EDIT & UPDATE" என்பதை தேர்வு செய்து தொலைபேசி எண், சாதிப்பிரிவு மற்றும் பிறந்ததேதி ஆகியவற்றை உள்ளீடுசெய்து ஏற்கனவே நிரப்பப்பட்ட விண்ணப்பத்தில் தவறுகள் ஏதும் இருப்பின் அதனை சரி செய்து கொள்ள வேண்டும்.

6. Candidates are hence requested to fill in the online application form with utmost care as no correspondence regarding change of details will be entertained.

   விண்ணப்பதாரர்கள் தங்களது விவரங்களை உள்ளீடு செய்யும் போது மிகுந்த கவனத்துடன் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இணையவழி விண்ணப்பத்தினை மாற்றம் செய்யக்கோரி பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டது.

7. Candidates need not send the printout of the online application or any other supporting documents to the Rural Development and Panchayat Raj Department, Secretariat, Chennai-9.

   விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப நகலினையோ அல்லது சான்றிதழ்களையோ சென்னை, தலைமைச் செயலகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கு அனுப்ப தேவையில்லை.

**Note:**

1. Candidate are advised in their own interest to apply online much before the closing date and not to wait till the last date to avoid the possibility of disconnection/inability/failure to log on to the www.tnrd.gov.in on account of heavy load on internet/website.

   விண்ணப்பதாரர்கள் அலுவலக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் போது விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமோ அல்லது தொழில்நுட்ப பிரச்சனைகளோ எழ வாய்ப்புள்ளது.

2. Rural Development and Panchayat Raj Department, Secretariat does not assume any responsibility for the candidates not being able to submit their applications within the last date on account of the aforesaid reasons or for any other reason beyond the control of www.tnrd.gov.in

மேற்கூறிய காரணங்களால் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை கடைசி கட்ட நாள்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு தலைமைச் செயலகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை பொறுப்பாகாது.

3. There is a provision to modify the submitted Online Application. Candidates are requested to make use of this facility to correct their details in the Online Application, if any. This modification facility will be available up to the last date for applying online for the post. After this last date, no modification will be permitted. Candidates should take utmost care while filling in the Online Application. Certain fields are fixed and cannot be edited. Candidates are hence requested to fill in the online application form with utmost care as no correspondence regarding change of details will be entertained.

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்திலுள்ள விவரங்களை தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி வரை மாற்றிக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடைசி நாளுக்குப் பிறகு அவர்கள் விண்ணப்பத்தில் எந்தவொரு மாறுதலையும் செய்ய இயலாது. மேலும் சில விவரங்களை விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் போது மிகுந்த கவனத்துடன் விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்தில் தவறாக கொடுக்கப்பட்ட விவரங்களை மாற்றிக் கொள்ள வேண்டி விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் எந்தவொரு வேண்டுகோளும் பரிசீலிக்கப்படமாட்டாது.

4. Candidates should carefully fill in the details in the Online Application at the appropriate places and click on the ‘SUBMIT” button at the end of the On-Line Application format. Before pressing the ‘SUBMIT” button, candidates are advised to verify every particular filed in the application. The name of the candidate or name of his/her father/husband etc. should be spelt correctly in the application as it appears in the certificates/mark sheets. Any change/alteration found may lead to disqualification of the candidature.

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை மிகுந்த கவனத்துடன் உள்ளீடு செய்து விண்ணப்பத்தினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சமர்ப்பிக்கும் முன்னர் தாங்கள் அளித்த விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளனவா என சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பதாரர்களின் பெயர், அவர்களது பெற்றோர் அல்லது கணவரின் பெயர் ஆகியவற்றை சான்றிதழ்களில் உள்ளபடி மிகச்சரியாக பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்படி விவரங்களில் மாற்றங்கள் ஏதுமிருப்பின் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது.

5. Request for change/correction in any particulars in the Application Form shall not be entertained under any circumstances AFTER THE LAST DATE FOR Editing/Updating application details specified, The Rural Development and Panchayat Raj Department, Secretariat will not be responsible for any consequences arising out of furnishing of incorrect and incomplete details in the application or omission to provide the required details in the application form.
விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாளுக்குப்பின்னர் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை மாற்ற வேண்டி பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் தரும் தவறான, முழுமையற்ற விவரங்கள் அல்லது விடுபட்டுப்போன விவரங்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம் பொறுப்பாகாது.

6. Any clarification may be obtained from the Help Desk Nos.044-25665551 and 25665488. You can also send queries to rdprop1oa@gmail.com.
கூடுதல் விவரங்கள் அல்லது சந்தேகங்களுக்கு 044-25665551 மற்றும் 25665488 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.